(ii) The loan from the Corporation will not exceed 66 2/3 per cent of the cost of the scheme.

(iii) The loan will be guaranteed as to payment of interest and repayment of principal, by the State Government.

(iv) Interest will be charged at the rate of 6½ per cent per annum, payable half-yearly.

(v) The loan will be required to be repaid on the expiry of 25 years from the date of drawing the same.

(vi) The Municipality to set up a Sinking Fund by setting apart annually such sum as would enable the loan to be repaid at the end of 25 years. The amount to the credit of the Sinking Fund should be invested in Central Government Securities.

இந்த விதிகளின்படி L.I.C. கடன் கொடுக்க முன்வந்திருக்கிருர்கள்.

DR. H. V. HANDE: Sir, in view of the importance of the Drainage Scheme for the Madurai City because it is practically one-third of the Madras City, will the Hon. Chief Minister or the Health Minister come forward to give us some assurance in this House that this scheme will be taken up immediately or in the near future?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினருடைய கருத்தை மனதில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. என். சங்கரய்யா :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாநிலத்தில் இரண்டாவது பெரிய நகரம் மதுரை மாநகர். அந்த நகரின் பாதாள சாக்கடை விஸ்தரிப்புத் திட்டத்திற்கு, எல்.ஐ.சி.யின் நிபந்தனைகளின் அடிப்படையில் உதவி கோரி நகர சபை ஏற்பாடு செய்தால், அதை அரசாங்கம் சாதகமாகப் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எல்.ஐ.சி.யின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மதுரை நகராட்சி கடன் கோர முன்வருமானல், அது அனுதாபத்தோடு அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தை வார்டுகளில் முழு அளவில் செய்யாவிட்டாலும், பகுதி பகுதியாக, பாக்கெட் ஸ்கீம் என்ற முறையில் விஸ்தரிக்க, அப்படி அனுமதிக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து, பரிசீலனை செய்யப்படும்.

**மாணபுமிகு துணைப் பேரவைத் தலைவர் :** வினுக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்பு தீர்மானம்.

### தீ விபத்திஞல் பாதிக்கப்பட்டவர்களின் மறு சீரமைப்பும் துயர் தீர்க்கும் நடவடிக்கைகளும்.

**மாணபுமிகு துணைப் பேரவைத் தலைவர் :** திரு. ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர விரும்புகிருர்கள். அவர் அறிவிப்பு கொடுத்திருக்கும் தீர்மானத்தைப் படிக்க அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறேன்.

1967 ஜூலை 3]

Dr. H. V. HANDE ; Mr. Deputy Speaker, Sir, I do hereby give notice of the following adjournment motion;

" I wish to move for an adjournment of the business of the Assembly for discussing a definite matter of urgent public importance, namely, the rehabilitation and relief measures to be taken in respect of nearly 2,000 persons rendered homeless in a blaze of fire which destroyed nearly 135 huts in Teynampet and 50 huts in Royapuram on Saturday, the 1st July 1967".

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை அன்றாட சர்க்கார் அலுவலைச் சேர்ந்தது. மேலும், இந்தப் பிரச்சினையில் மாநகராட்சி தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிருர்கள். ஆகவே, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன் ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் எற்றுக்கோள்ள வெண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் :** இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் தீ விபத்துக்களுக்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது சர்க்காரின் அன்றாட அலுவல்களில் ஒன்ருகும். ஆகவே இப்பொழுது இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்துப் பேசவேண்டும் என்பது அவசியம் இல்லை. மேலும் இது பற்றி, நிதி ஒதுக்கு மசோதா வரும்போது பேச வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் நிராகரிக்கிறேன்.

### 3. அறிவிப்பு

### மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) தேர்தல்.

**மாண்புமிகு துணைத் பேரவைத் தலைவர் :** மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. சா. கணேசன், (2) திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு, (3) திரு. கே. டி. கோசல்ராம், ஆகிய மூவரும் இப்பேரவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால், பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவில், 1—6—1967-லிருந்து நிரப்பப்பட வேண்டிய மூன்று இடங்களுக்கு, தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க எற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி, பகுதிவாரி அடிப்படையில் (Proportional Representation) இத்தேர்வு நடைபெறுவது இல்லை. எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 6—7—1967 வியாழக்கிழமை மாலை 3-மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 7—7—1967, வெள்ளிக்கிழமை, காலை 11-மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 8—7—1967 சனிக்கிழமை பிற்பகல் 2-மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்று இ[illegible]ளுக்கு, மேற்படுமாயின் 11—7—1967 செவ்வாய்க் கிழமை காலை [illegible]க்கும் பிற்பகல் 1-மணிக்கும் இடையே சென்னை, கோட்டையில் இ[illegible]ம் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.